/மின்னஞ்சல்/

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள்,**

**சென்னை – 06.**

**ந.க.எண்.1662128/ஜி3/2025, நாள் 09.10.2025**

பொருள் : மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டம் – வளரிளம் பருவக் கல்வி தொடர்பான **பங்கேற்று நடித்தல்** (Roleplay) போட்டியினை நடத்துதல் –சார்பாக.

பார்வை : 2025-26 ஆண்டிற்கான மக்கள் தொகை கல்வித் திட்ட ஆண்டுத் திட்டம்.

... ... ...

பார்வையில் காணும் புதுடெல்லி, தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் நிதியுதவியுடன், 2025-26 கல்வியாண்டில், மக்கள் தொகைக் கல்வி சார்ந்த **பங்கேற்று நடித்தல்** (Roleplay) போட்டியினை இணைப்பில் கண்டுள்ளவாறு 19 மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும், 9 ஆம் வகுப்பு மாணவ மாணவியருக்கு, அளிக்கப்பட்டுள்ள தலைப்பு மற்றும் நிபந்தனைகளின்படி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளி அளவில் நடத்தப்படும் போட்டியில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழு மாவட்ட அளவிலும், அதில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழு மாநில அளவிலும், மாநில அளவில் முதலிடம் பெறும் பள்ளி மாணவர் குழுவிற்கு ஆங்கிலத்தில் பங்கேற்று நடித்தல் செயல்பாடுகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அக்குழு NCERT-ல் நடைபெறவுள்ள தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று நடித்திட வேண்டும்.

**பள்ளிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- பங்கேற்று நடித்தல் போட்டி அரசுப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் நடத்தப்பட வேண்டும்.
- இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, தலைமை ஆசிரியரால் நியமிக்கப்பட்ட ஆசிரியரின் உதவியுடன் உரையாடல்களை தயார் செய்து, மாணவர்கள் பயிற்சி பெற வேண்டும்.
- சூழ்நிலையில் கொடுக்கப்பட்டுள்ள பாத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ, குறைக்கவோ கூடாது.
- இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ மாணவிகள் சிறப்பு உடைகள் அல்லது அலங்காரம் ஆகியவற்றை கண்டிப்பாகத் தவிர்த்து, தங்கள் பள்ளிச் சீருடையிலேயே பங்கேற்று நடிக்க வேண்டும். பங்கேற்று நடித்தலின்போது மாணவர்கள் எந்தப் பொருளையும் பயன்படுத்தக் கூடாது.
- பள்ளிகள் பங்கேற்று நடித்தல் போட்டியை அந்தந்தப் பள்ளிகளில் நடத்தி மிகச் சிறந்த ஓர் அணியினை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள ஆசிரியரின் துணையுடன் தலைமை ஆசிரியர் அனுப்பி வைக்க வேண்டும். **பங்கேற்று நடித்தல் மாணவர் குழுவில் பெண் குழந்தைகள் இருந்தால், கண்டிப்பாக ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் ஆசிரியர் மாணவ, மாணவிகளை** மாநில அளவிலான பங்கேற்று நடித்தல் போட்டிக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும்.
- மாநில அளவிலான போட்டியினை நடத்திடும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தால் வெளியூரிலிருந்து மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வருகை புரியும் மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தங்கும் வசதி (Refresh) ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பயணப்படி வழங்கப்படமாட்டாது.

- திருச்சியில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு இரயிலில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கட்டணம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் மையத்தில் வழங்கப்படும்.

**மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- மாவட்ட / மாநில அளவிலான போட்டியை நடத்த செயல்முறைகளின் இணைப்பில் தெரிவித்துள்ளவாறு நடுவர்களை நியமித்து, மாவட்ட அளவிலான முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை சார்ந்த முதல்வர் தெரிவு செய்ய வேண்டும்.
- முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கானப் புத்தகங்கள் மட்டுமே பரிசாக வழங்க வேண்டும். மேலும், இப்போட்டிக்கான செலவினம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அனுப்பப்பட உள்ள மக்கள் தொகைக் கல்வித் திட்ட நிதியிலிருந்து இணைப்பில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மாவட்ட அளவில் முதலிடம் பெறும் அணியின் பெயர்களை, மாநில அளவில் நடத்திடும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலம் மாநில அளவிலான போட்டி நடைபெறும் நாளுக்கு முன்னர் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களும் அனுப்பி வைக்க வேண்டும்.
- இப்போட்டியில் பங்கேற்ற பள்ளிகள்/பங்கேற்பாளர்கள்/பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவு செய்யப்பட்ட தலைப்புகள் ஆகியவற்றை, இந்நிறுவனத்திலிருந்து அனுப்பப்பட உள்ள Google Link-ல் நிரப்ப வேண்டும்.

இப்போட்டி மாணவர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படுவதால் அரசுப்பள்ளித் தலைமையாசிரியர்கள் இப்போட்டிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அவர்களை ஊக்குவிக்குமாறும், இச்செயல்முறைகளை அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறும் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், இப்போட்டியை சிறப்பாக நடத்திமுடித்த உடன், இப்போட்டிக்கான செலவின அசல் இரசீதுகளை தணிக்கைக்கு சமர்ப்பிக்கம் பொருட்டு பராமரிக்கவும், இச் செலவின முழு விவரம் (UC) மற்றும் மீதமுள்ள தொகையினை சென்னை-6, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இயக்குருக்கு அனுப்பி வைக்குமாறும் சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவன முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு : **பங்கேற்று நடித்தல் (Roleplay)** போட்டி நடத்திட கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் விவரங்கள்.

B.O.

**இயக்குநர்**

**பெறுநர்**

சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்கள் / சார்ந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.

**நகல்**

1. இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை-6 – அவர்களுக்கு மேல்நடவடிக்கைக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

2. அரசுச் செயலர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-09, அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.

## பங்கேற்று நடித்தல்)Roleplay( போட்டி தொடர்பான விவரங்கள்

**அட்டவணை -1 பங்கேற்று நடித்தல் போட்டி நடத்தப்படவுள்ள மாவட்டங்கள் .**

| வ.எண் | மாவட்டம் | வ.எண் | மாவட்டம். |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | 10. | நாகப்பட்டினம் |
| 2. | செங்கல்பட்டு | 11. | இராமநாதபுரம் |
| 3. | சென்னை | 12. | இராணிப்பேட்டை |
| 4. | கோயம்புத்தூர் | 13. | சேலம் |
| 5. | கடலூர் | 14. | சிவகங்கை |
| 6. | தருமபுரி | 15. | தஞ்சாவூர் |
| 7. | கள்ளக்குறிச்சி | 16. | திருவாரூர் |
| 8. | கிருஷ்ணகிரி | 17. | திருநெல்வேலி |
| 9. | மயிலாடுதுறை | 18. | திருப்பூர் |
| | | 19. | வேலூர் |

**அட்டவணை -2 பங்கேற்று நடித்தல் போட்டிக்கான பதினொன்று தலைப்புகள்**

1. ஆரோக்கியமான வளர்ச்சி
2. மனவெழுச்சி நலவாழ்வும் மனநலமும்
3. ஒருவருக்கொருவருடனான உறவு
4. விழுமியங்களும் பொறுப்புள்ள குடியுரிமையும்
5. பாலின சமத்துவம்
6. ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் சுகாதாரம்
7. போதைப் பொருள்களின் பயன்பாட்டினைத் தடுத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்
8. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துதல்
9. இனப்பெருக்க சுகாதார மற்றும் எச்ஐவி தடுப்பு முறைகள்
10. வன்முறை மற்றும் காயங்களிலிருந்து கவனம் மற்றும் பாதுகாப்பு
11. இணையம், சாதனங்கள் மற்றும் ஊடகத்தின் பாதுகாப்பான பயன்பாட்டை மேம்படுத்துதல்

**பங்கேற்று நடித்தல் (Roleplay)க்கான நேரம்** – 5 -6 நிமிடங்கள் மட்டும்

**அட்டவணை -3 போட்டிகளுக்கான கால அட்டவணை**

| போட்டிகள் | இடம் | நாள் |
|---|---|---|
| பள்ளி அளவு | அந்தந்தப் பள்ளிகள் | 27.10.2025 |
| மாவட்ட அளவு | அந்தந்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அல்லது ஏதேனும் ஓர் அரசுப் பள்ளி | 03.11.2025 |
| மாநில அளவு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருச்சிராப்பள்ளி தெரிவு செய்யும் ஒரு மையம். | 11.11..2025 |
| தேசிய அளவு | NCERT, புதுடெல்லி | ஜனவரி- 2026 |

அட்டவணை -4 போட்டிகளை மதிப்பீடு செய்யும் நடுவர்கள் நியமனம்

| போட்டிகள் | நடுவர்கள் |
|---|---|
| பள்ளி அளவு | அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர், இரண்டு ஆசிரியர்கள் (தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி) |
| மாவட்ட அளவு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், வளரிளம் பருவக் கல்வியில் அனுபவம் உள்ள போட்டியில் பங்குபெறாத ஒரு பள்ளியின் தலைமை ஆசிரியர், நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் ஒருவர் |
| மாநில அளவு | வளரிளம் பருவக் கல்வி வல்லுநர், கல்வியாளர்,<br>நிகழ்த்துக் கலைகளில் அனுபவம் மிக்கவர் |

**அட்டவணை -5 பங்கேற்று நடித்தல் )Roleplay( போட்டியின் உட்கூறுகளின் மதிப்பெண் பங்கீடு**

| வ. எண். | உட்கூறுகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1 | சூழ்நிலையைச் சரியாகப் பயன்படுத்துதல் | 25 |
| 2 | பங்கேற்று நடித்தல் | 25 |
| 3 | பங்கேற்று நடித்தலின்போது வாழ்வியல் திறன்களின் வெளிப்பாடு | 30 |
| 4 | பார்வையாளர்கள் கேட்கும் வினாக்களுக்கு சரியாக பதில் அளித்தல் | 10 |
| 5 | குழுவினர் பங்கேற்று நடித்தல் கருத்தை தொகுத்து வழங்குதல் | 10 |
| | மொத்தம் | 100 |

**அட்டவணை -6 மாவட்ட அளவிலான பங்கேற்று நடித்தல் (Roleplay) போட்டிக்கான செலவின விவரம்**

| விவரம் | கூறுகள் |
|---|---|
| மாவட்ட அளவிலான பரிசுத் தொகை<br>(புத்தகங்கள்) | முதல் பரிசு ரூ. 300/- x 5 (குழு) = ரூ.1500/-<br>இரண்டாம் பரிசு ரூ. 200 /- x 5 (குழு) = ரூ.1000/-<br>மூன்றாம் பரிசு ரூ. 150/- x 5 (குழு) = ரூ.750/- |
| மாவட்ட அளவிலான நடுவர்கள் மதிப்பூதியம் | ரூ. 500 x 3 (நபர்கள்) = ரூ.1500/- |
| சிற்றுண்டி | 500 x 1= ரூ.500/- |
| மொத்தம் | ரூ.5250/- |
| 19 மாவட்டங்களுக்கான<br>மொத்தச் செலவினத் தொகை | ரூ.99,750/- |

**அட்டவணை – 7 மாநில அளவிலான பங்கேற்று நடித்தல் )Roleplay( போட்டிக்கான செலவின விவரம்**

| விவரம் | கூறுகள் | மொத்தம் |
|---|---|---|
| நடுவர்கள் மதிப்பூதியம் மற்றும் பயணப்படி | ரூ. 1000 x 3(நபர்கள்) | ரூ.3000/- |
| மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான காலை உணவு, சிற்றுண்டி மற்றும் மதிய உணவு | ரூ. 400 x 140(நபர்கள்) | ரூ.56,000/- |
| ஆசிரியர்களுக்கான பயணப்படி மற்றும் தினப்படி | ரூ. 1000 x 38 (நபர்கள்) | ரூ.38,000/- |
| மாணவர்களுக்கான பயணப்படி | ரூ.700 x 95(5 குழு) | ரூ.66,500/- |
| மாநில ஒருங்கிணைப்பாளருக்கான பயணப்படி, தினப்படி மற்றும் தங்கும் இடவசதி | ரூ. 5500 x 1(நபர்) | ரூ.5500/- |
| மாணவர்களுக்கான பரிசுத்தொகை மதிப்பு | முதல் பரிசு 500 x 5= ரூ.2500/-<br>இரண்டாம் பரிசு 300 x 5= ரூ.1500/-<br>மூன்றாம் பரிசு 200 x 5= ரூ.1000/- | ரூ.5000/- |
| சில்லரைச் செலவினம் | | ரூ.5000/- |
| மொத்தம் | | ரூ.1,79,000/- |
| 19 மாவட்டங்களுக்கான மொத்தச் செலவினத் தொகை | | ரூ.2,78,750/- |

**பங்கேற்று நடித்தல் போட்டிக்கான தலைப்புகள் மற்றும் சூழ்நிலைகள்**

**தலைப்பு-1 ஆரோக்கியமானவளர்ச்சி**

**சூழ்நிலை -1**

பூஜா, சுஜாதா, அபிதா மற்றும் ராதாஆகியோர் நெருக்கமான தோழிகள். அனைவருக்கும் 13 வயது ஆகிறது. அவர்கள் ஒன்றாக நேரத்தைச் செலவிடுவார்கள். அவர்கள் புதிய திரைப்படம், புதிய ஆடை, வீட்டுப்பாடம், வகுப்பில் உள்ள மாணவர்கள் என எல்லாவற்றையும் குறித்துப் பேசக் கூடியவர்கள். நேற்று, ராதாவுக்கு உடலில் ஏதோசங்கடமாகத் தோன்றியது. அவளுக்கு மாதவிலக்குக்கு ஏற்பட்டுள்ளதால் அவளின் சீருடையில் கறை படிந்து விடுமோ என்று கவலைப்பட்டாள். சென்ற மாதம், சுஜாதா பருவமடைந்ததைத் தொடர்ந்து அவள் வீட்டில் அதனைப் பெரிய விழாவாகக் கொண்டாடினர். மூன்று மாதங்களுக்கு முன்பு அபிதா பள்ளியில் பருவமடைந்ததால் தன் ஒன்று விட்ட அக்காவிடம் சானிடரி நாப்கின் வாங்கிப் பயன்படுத்தியதைப் பூஜா நினைவு கூர்ந்தாள். பூஜாவைத் தவிர மற்ற தோழிகள் அனைவரும் பருவமடைந்திருந்தனர். இதனால் பூஜாவிடம் ஏதேனும் குறை உள்ளதா?

**சூழ்நிலை -2**

பள்ளியின் ஆண்டு விழாவிற்கு 8ஆம் வகுப்பில் படிக்கும் ஷாலினியும் அவள் தோழிகளும் தயாராகி வந்தனர். அவர்கள் அனைவரும் மிகவும் உற்சாகமாக இருந்தனர். ஷாலினி பரதநாட்டியத்தில் பங்கேற்க இருந்தாள். அவளது வகுப்புத் தோழிகள் அனிதா மற்றும் உமா ஆகியோர் நாடகத்தில் பங்கேற்றிருந்தனர். ஒரு நாள் அனிதா ஷாலினியை கேலி செய்து, "நீ மிகவும் கருப்பாக இருக்கிறாய். உன்னை மேடையில் பார்ப்பதற்குக் கூடுதல் மின் விளக்கு தேவைப்படும் என்றாள்." ஷாலினி அவளுக்கு எந்த பதிலையும் அளிக்கவில்லை. உமா , ஷாலினிக் குறித்து வருத்தப்பட்டு "நீ நன்றாக நடனமாடுகிறாய். நன்றாக சிவப்பாகத் தெரிய நீ ஏன் நல்ல முகப் பூச்சைப் பயன்படுத்தக்கூடாது? நீ கருப்பாக இல்லாமல் சிவப்பாக இருந்தால் மேடையில் எவ்வளவு அழகாக இருப்பாய் என்று உன்னால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? "என்றாள். ஷாலினி சிரித்துக்

கொண்டே, "நன்றி, உமா உன் அக்கறையை நான் பாராட்டுகிறேன், ஆனால் தற்போது எனக்குள்ள நிறத்தில் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நானும் எனது ஆசிரியரும் எனது நடனப் பயிற்சியில் கடுமையாக பயிற்சி செய்து வருகிறோம், எங்கள் முயற்சிகளும் உன் வாழ்த்துகளும் ஒரு நல்ல அரங்கேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறோம்" என்றுகூறினாள்.

**தலைப்பு -2 மனவெழுச்சி நலவாழ்வும் மனநலமும்**

**சூழ்நிலை -1**

அனிமா நேற்று தான் 8 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி அடைந்தாள். திடீரென்று அவளது பெற்றோர், நாளை முதல் அவள் பள்ளிக்குச் செல்ல வேண்டாம்; அதற்கு பதிலாக வேலைக்கு செல்ல வேண்டும் என்று அவளிடம் கூறினார்கள். அனிமா மிகவும் வருத்தப்பட்டாள். ஆனால் அவள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. எப்போதும் அவள் கல்லூரிக்குச் செல்ல வேண்டும் என்ற கனவு குறித்து வருத்தப்பட்டு, அவளுடைய ஆசைகளை அவளின் பெற்றோர் புரிந்து கொள்ளாததற்காக அவர்களைக் குற்றம் சாட்டினாள். அவள் இனி ஒரு போதும் தனது விருப்பங்களை அவர்களிடம் சொல்ல வேண்டாம் என்று முடிவு செய்தாள்.

**சூழ்நிலை -2**

ஜேம்ஸ் இசையை அதிகம் விரும்புகிறான். அவன் பாடவும் ஆசைப்படுகிறான். நேற்று அவனின் வகுப்பாசிரியர், வகுப்புகளுக்கு இடையே நடைபெறவுள்ள பாட்டுப் போட்டியை அறிவித்தவுடன் உற்சாகத்தால் அவன் கண்கள் பிரகாசமானது. ஆனால் இன்று அவனின் வெளிப்பாடுகள் மாறியது. போட்டி தொடங்குவதற்கு முன் அவனின் கைகள் வியர்க்கத் தொடங்கின. இதயம் வேகமாக துடித்தது; அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அவனுக்குச் சௌகரியமாக இல்லாததால் அடிக்கடி கழிப்பறைக்குச் சென்று வந்தான். அவன் பாடுவதற்காக காத்திருந்தபோது, தான் தயார்செய்த பாடலின் வரிகள் தனக்கு மறந்துவிடுமோ என்று நினைக்க ஆரம்பித்தான். போட்டியாளர் பட்டியலில் இருந்து தன்பெயரைத் திரும்பப் பெற முடிவு செய்தான். ஆகவே பாட்டுப் போட்டியில் அவன் பாடவில்லை.

**தலைப்பு-3 ஒருவருக்கொருவருடனான உறவு**

**சூழ்நிலை -1**

இக்பால் பள்ளி விடுதியில் சேர்ந்தபோது, அவனைவிட மூத்த மாணவர்கள் குழு அவனை கொடுமைப்படுத்தத் தொடங்கியது. இது ஒரு வழக்கமான பிரச்சனையாக மாறியது, மேலும் அவர்கள் கூறும் வேலையை இக்பால் செய்யாவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அச்சுறுத்தத் தொடங்கினர். சில நேரங்களில் அவர்களின் துணிகளைக் துவைக்கவும், இக்பாலிடம் உள்ள சிற்றுண்டி மற்றும் பணம் ஆகியவற்றை கொடுக்கச் சொல்லியும் துன்புறுத்துவர். இக்பால் ஹாஸ்டலில் இருக்க மிகவும் பயப்படுவதாகவும், பேசாமல் இருப்பதாகவும், தன்னம்பிக்கையை இழந்து விடுவதாகவும் உணர்கிறான்.

**சூழ்நிலை -2**

சிம்ரனும் விஷாலும் ஒரே பகுதியில் வசித்து வருகிறார்கள். பல ஆண்டுகளாக நண்பர்களாக உள்ளனர். அவர்கள் ஒரே பள்ளியில் 11 ஆம்வகுப்பில் படிக்கின்றனர். சமீபத்தில் விஷால் சிம்ரன் மீதான தனது காதலை வெளிப்படுத்தும் வகையில் வாழ்த்து அட்டை ஒன்றை அனுப்பினான். விஷால் மீதான தன் உணர்வுகள் குறித்து சிம்ரன் குழப்பமடைகிறாள். அவள் அதைக் குறித்து முடிவெடுக்க அதிக காலம் தேவை என்று

நினைக்கிறாள், இருப்பினும் உடனே பதிலளிக்கவில்லை என்றால், விஷாலின் நட்பை இழக்க நேரிடும் என்று சிம்ரன் கவலைப்படுகிறாள்.

**தலைப்பு-4 விழுமியங்களும் பொறுப்புள்ள குடியுரிமையும்**

**சூழ்நிலை -1**

மீனா, ஜோசப், சரிதா மற்றும் இஸ்மாயில் என்பவர்கள் சிறுவயதில் இருந்தே நல்ல நண்பர்கள். அவர்கள் இப்போது 10ஆம்வகுப்பில் படிக்கிறார்கள். அவர்கள் மேல்நிலைக் கல்வியில் எந்தப் பாடப்பிரிவைத் தேர்வு செய்வது என்று யோசிக்கிறார்கள். பள்ளியில் அறிவியல், வணிகம் மற்றும் கலைப் பிரிவு பாடங்கள் உள்ளன. ஜோசப் மற்றும் இஸ்மாயில் ஆகியோர் அறிவியலைத் தெரிவு செய்யவும், சரிதா வணிகப் பிரிவை எடுக்கவும் விரும்புகிறார்கள். மீனா ஓர் ஓவியராக விரும்புகிறார். வெவ்வேறு பாடப்பிரிவைத் தேர்ந்தெடுப்பதால் பல்வேறு வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் இதனால் நண்பர்களைப் பிரியவேண்டும் என்று மீனாவிற்குத் தெரியும்.

**சூழ்நிலை -2**

சுரேசும், ரபேகாவும் கிராமத்தில் நடைபெறும் திருவிழாவிற்குச் செல்கிறார்கள். ரபேகா தனக்குப் பிடித்த ஒரு நடிகரின் சுவரொட்டியை வாங்க விரும்புகிறாள். ஆனால் அதை வாங்க அவளிடம் பணம் இல்லை. சுரேஷ் தனது பெற்றோரின் கைப்பேசியைப் பயன்படுத்தி அந்தப் புகைப்படத்தை யாருக்கும் தெரியாமல் படமெடுக்கிறாள். ரபேகா சுரேசுக்கு நன்றி தெரிவிக்கிறாள். அவர்கள் உயர்வகுப்பில் படிக்கும் மற்றும் அவர்கள் வசீகரமானவனாகக் கருதும் மோகன் என்ற ஒரு மாணவனைப் பார்க்கின்றனர். உடனே சுரேஷ் தனது கைப்பேசியைப் பயன்படுத்தி மோகனை ரகசியமாக புகைப்படம் எடுக்கிறாள். ஆனால் ரபேகா இதனை மிகச் சங்கடமாக உணர்கிறாள்.

**தலைப்பு-5 பாலின சமத்துவம்**

**சூழ்நிலை -1**

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் முரளிக்கு கலை மற்றும் கோலம் ஆகியவற்றில் ஆர்வம் உண்டு. அவரது வீட்டிற்கு அருகில் ஒரு கோலப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவன் அப்போட்டியில் பங்கேற்க விரும்புகிறான். இதை அறிந்ததும் அவரது வயதில் மூத்த ஒன்று விட்ட சகோதரர்கள் அவரைப் பார்த்துச் சிரிக்கிறார்கள்.

**சூழ்நிலை -2**

லலிதா மற்றும் அருண் இருவரும் ஒன்பதாம் வகுப்பில்ப டிக்கின்றனர். ஒரு நாள், இரண்டு வயதில் மூத்த மாணவர்கள் லலிதாவின் உடல் தோற்றம் குறித்து கேலி செய்து அனுப்பி அவளைத் தொட முயன்றனர். அத்தகைய நடத்தையை அவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அவள் கூறினாள். அவர்கள் சிரித்துக் பள்ளி நடைபாதையில் அவளைப் பார்க்கும் போதெல்லாம் கொண்டே கேலி செய்தனர். மற்றொரு நாள், அவர்கள் அருணை தள்ளி விட்டு, அவனைப் பார்த்து சிரித்தனர், அவன் மிகவும் குள்ளமானவன் என்றும், அவன் இன்னும் ஒரு ஆணாக இருக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினர். அருண் அவர்களிடம் இது போன்ற நடத்தையை நிறுத்துமாறு சொன்னான். சில வகுப்புத் தோழர்கள் (மாணவிகள் மற்றும் மாணவர்கள்) இந்த இரு சம்பவங்களையும் பார்த்தார்கள், ஆனால் அவர்கள் லலிதாவிற்காகவும், அருணுக்காகவும் வருத்தப்பட்டாலும் வேறு எதையும் செய்யவில்லை.

**தலைப்பு-6 ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் சுகாதாரம்**

**சூழ்நிலை -1**

**சூழ்நிலை -2** நமது உடலின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய மற்றும் நமது உடலின் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ளத் தேவையான பல்வேறு உணவுத் தொகுதிகளிலிருந்து தேவையான சரியான அளவு உணவு சார்ந்த 'சரிவிகித உணவு' பற்றிய ஒரு பங்கேற்று நடித்தல்.

ஹேமா என்பவர் முறையே 8,4,2 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாய். ஹேமாவின் கணவர் அதிகாலையிலேயே வேலைக்குச் செல்லும் தினக்கூலித் தொழிலாளி, ஹேமாவிற்கு உதவி செய்ய யாரும் இல்லாத நிலையில் குழந்தைகளைப் பராமரித்தல் மற்றும் வீட்டு வேலைகளான சமைத்தல், சுத்தம் செய்தல் துணிகளைத் துவைத்தல், பாத்திரங்களைத் துலக்குதல் போன்ற பணிகளைச் செய்ய சிரமப்படுவார். வழக்கமாக, ஹேமாவினால் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே சமைக்க முடியும். அவர்கள் வீட்டில் குளிர்சாதனப் பெட்டி இல்லாததால் சமைத்த உணவு வெளியிலேயே இருக்கும். அவர் வீட்டின் உள்ளும் புறமும் உள்ள ஏராளமான ஈக்கள் அடிக்கடி உணவின் மீதும் அமரும். பல வேலைகளை செய்து முடிக்கும் அவசரத்தில் அடிக்கடி உணவுப் பொருள்களை மூட மறந்து விடுவார். மேலும் கைகளைக் கழுவாமலே உண்ணும் பழக்கமுடைய குழந்தைகளுக்கு எட்டாதவாறு உணவினைவைத்துவிடுவார். ஹேமாவும் குடும்பத்தினரும் திறந்த வெளியில் தான் மலம் கழிப்பர். அதனால் குழந்தைகள் ஒவ்வொரு முறை அங்கு சென்று வந்தபின்னரும் அவர்களைச் சுத்தம் செய்வது ஹேமாவிற்குக் கடினமாகஉள்ளது. அதே வேளையில் குழந்தைகள் வெறும் கால்களுடன் விளையாடுவர். சில நேரங்களில் குழந்தைகளைச் சுத்தம் செய்த பின்பு தன் கைகளைச் சுத்தம் செய்ய மறந்து விடுவார். தன் கைகளால் நாள்தோறும் குளிக்க வைக்க சிரமப்படுவார். குழந்தைகளின் நகங்கள் வெட்டப்படாமலும் அழுக்காகவும் இருக்கும். குழாயில் நீர் வராத வேளைகளில் அருகில் உள்ள குட்டையிலிருந்து நீர் எடுத்து உபயோகிப்பார். ஹேமா மற்றும் அவர் குடும்பத்தினருக்கு அடிக்கடி வயிற்றுவலியும் வயிற்றுப்போக்கும்ஏற்படுகின்றன. சமீபமாக அவரின் சிறிய குழந்தைக்குக் குமட்டல் உணர்வு ஏற்படுவதாகக் கூறினாள். மேலும் அக்குழந்தையின் மலத்தில் இரத்தம் வருவதையும் கவனித்தார். ஹேமா, தான் மிகவும் பலவீனமாக இருப்பதாக உணர்ந்தார்.

**தலைப்பு-7 போதைப் பொருள்களின் பயன்பாட்டினைத் தடுத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்**

**சூழ்நிலை -1**

ராகுல் ஒன்பதாம் வகுப்பு ஆண்டு இறுதித் தேர்வை சிறப்பாக எழுதியிருந்தான். அதே போல 10-ஆம் வகுப்பிலும் சிறப்பாக தேர்வு எழுத முடியுமா என கவலை ஏற்பட்டது. அவனது பெற்றோர் எப்பொழுதும் வகுப்பில் முதல் மாணவனாக இருக்கவேண்டுமென எதிர்ப்பார்ப்பதாக அவனிடம் கூறுவர். ராகுல், பெற்றோரை ஏமாற்றத்திற்குள்ளாக்கக்கூடாது என்பதற்காக தன் பிரச்சனைகளை அவர்களிடம் கூறமாட்டான். தன் நண்பர்களில் சிலர் இதே போன்ற சூழ்நிலைகளைக் கடந்து செல்கிறார்கள் என்பதை அவன்உணர்ந்ததனால், அவர்களோடு தன்னுடைய பிரச்சனையைக் குறித்து உரையாடினான். தங்களுடன் சேர்ந்து புகைப் பிடித்தால் மனஅழுத்தம் சிறிது குறைந்து நிம்மதியாக இருக்கலாம் என்று நண்பர்கள் ஆலோசனை கூறினர். அவன் ஒவ்வொரு நாளும் ஒன்று முதல் இரண்டு சிகரெட்டை புகைக்கத் தொடங்கினான். அவன் தன்நிலை உணரும்முன் ஒரு மாதத்திற்குள்ளாக ஒரு நாளைக்கு ஆறு முதல் பத்துவரை சிகரெட்டுகள் பிடித்துக் கொண்டிருந்தான். அந்த புகைப்பிடித்தல் பழக்கம் அவனுக்கு தொடர் பழக்கமாக மாறிவிட்டது.

**சூழ்நிலை -2**

விஜய், புகைபிடிப்பவர். அவர், தன் நண்பர்களின் ஆலோசனைப்படி மனஅழுத்தத்தில் இருந்து மீள ஓர் உபாயமாகப் புகைபிடிக்கும் பழக்கத்தைப் பெற்றார். தன் நண்பர்களும் புகைபிடிக்க வேண்டும் என்பதில் விஜய் முனைப்பாக இருந்தார். அவர் முஜீப் மற்றும் மஞ்சுவிடம், "ஹலோ என்னிடம் சிகரெட் உள்ளது, வாருங்கள் புகைக்கலாம்" என்று கூறினார். முஜீப், புகைத்தலுக்கு எதிராக எந்த கருத்தும் இல்லாதவர். ஆனால் புகைப்பதை அனுபவித்து அறிந்து கொள்ள ஆர்வமாய் இருந்தார். ஆகவே, அவர்" நிச்சயமாக நன்றி, அதுசிறந்தது" என்றுகூறினார். மேலும் "எனக்கும் முயற்சித்துப் பார்க்க விருப்பம் தான். ஆனால் வாய்ப்பு கிடைக்கவில்லை. பெரியவர்கள் புகைப்பதைப் பார்க்கும் பொழுதெல்லாம், நானும் வசீகரிக்கப்பட்டேன்" என்றுகூறினார். அவர், தான் புகைக்கவில்லை என்றால் பிறர் தன்னைப் பரிகசிப்பர் என்று எண்ணினார். ஆகவே அவர் புகைக்கத் துவங்கினார். மற்றவர்களுக்கும் வழங்கினார். மஞ்சுவிற்கு புகைத்தல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரியும், ஆனால் பிறர், தன்னை அக்குழுவைச் சேர்ந்தவர் இல்லை என்று எண்ணுவதை மஞ்சு விரும்பவில்லை. ஆகவே தன் நேர்மறை எண்ணத்தை விட்டுக் கொடுக்கிறாள். "ஆம், நான் புகைக்க விரும்புகிறேன். இல்லையெனில் எனக்கு இக்குழுவில் இருக்கும் அளவிற்கு துணிவு இல்லை என்று நீங்கள் நினைக்கலாம்" என்றுகூறினாள். பின்னர் ஒரு சிகரெட்டை எடுத்து புகைக்கத் துவங்கினாள். ராஜீ, புகைபிடித்தல் தவறென்று நம்பிக்கை ஏற்படுத்தும் திறனோடு புகைத்தலுக்கு எதிர்கருத்துடையவர். அவர், "வாய்ப்பேஇல்லை", நான் பெரியவன் மற்றும் தைரியமானவன் என்பதை நிறுவுவதற்கு புகைபிடிக்கத் தேவையில்லை. புகைபிடித்தல், எனக்கும், பிறருக்கும் உடல் நலக்கேடு விளைவிக்கும் என்று எனக்குத் தெரியும். என் உடல்நலக்கேட்டின் மூலம் என் முதிர்ச்சியை நிரூபிக்க விரும்பவில்லை. அசோக், ஒரு சிகரெட் புகைப்பதால் ஒருவருக்கு கேடு விளைந்துவிடாது என்று எண்ணுகிறார். அதே வேளையில் அவர், புகைபிடித்தலில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவிரும்பவில்லை. இச்செயல் தன்னை புகைக்கும் பழக்கமுடையவராக மாற்றிவிடுமோ என்று அஞ்சினார். ஆகவே, விஜய் அளித்த சிகரெட்டை உறுதியுடன் மறுத்தார்.

**தலைப்பு-8 ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துதல்**

**சூழ்நிலை -1**

ஜாகீர், பர்வின் இருவரும் உடன்பிறப்புகள். இருவரும் வீட்டுப்பாடம் எழுதியபிறகு அவர்களது அம்மா ஒரு மணிநேரம் ஓய்வெடுக்கச் சொல்லுவார். அந்நேரத்தில் பர்வின் மிதிவண்டியில் வலம் வருவார். ஜாகிர் வீட்டில் இருந்து கொண்டு வீடியோ கேம் விளையாடுவான்.

**சூழ்நிலை -2**

அஜய் என்ற 14 வயது சிறுவன் பெட்டியில் அடைக்கப்பட்ட பொரித்த சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் மற்றும் இனிப்புகளை விரும்பி உண்ணுவான். பின்னிரவில் பெரும்பாலான நேரங்களில் தொலைக்காட்சி பார்த்தல் மற்றும் கணினியில் இணையத்தில் விளையாட்டு விளையாடுவதால் படிப்பில் கவனக் குறைவுடன் காணப்பட்டான். இப்பழக்கத்தால் அவனுடைய தூக்கம், படிப்பு மற்றும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது தேர்வு நேரம் என்பதால் தேர்வில் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்றுவிடுவோம் என மிகவும் கவலைப்பட்டான். இதனால் அவன் பள்ளியில் விளையாடுவதையும் மற்றும் வெளியில் தன் நண்பர்களைச் சந்திப்பதையும் நிறுத்திவிட்டான். இந்நிலையில் அவன் மீண்டும் படிக்க முயற்சி செய்தபோது, அவன் மனம் இணைய விளையாட்டுகளிலேயே நாட்டமாக இருந்தது. இந்த மன அழுத்தத்தை எதிர்கொள்ள சிகரெட் பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாகிறான்.

**தலைப்பு-9 இனப்பெருக்க சுகாதார மற்றும் எச்ஐவி தடுப்பு முறைகள்**

**சூழ்நிலை -1**

25 வயதான ரீட்டா திருமணம் செய்ய விரும்புகிறாள். ரீட்டாவும் அவளது பெற்றோரும் ரோஹித் என்பவரை அவளது வருங்கால கணவன் என தீர்மானிக்கின்றனர். ரீட்டாவின் பெற்றோர் ரோஹித்தின் பின்புலம் பற்றித்தெரிந்து கொள்ள, அவரது அலுவலகத்தில் பணிபுரிபவர்கள், அண்டை வீட்டார், குடும்ப உறவினர்கள் போன்றவர்களிடம் கேட்டறிந்து, அத்தகவல்களால் மனதிருப்தி கொள்கின்றனர். இக்கலந்துரையாடலின் போது, பள்ளியில் கேட்ட எச்ஐவி பற்றிய தகவல் ரீட்டாவின் நினைவில் வந்தது. ரோஹித்திடம் இந்த ஆபத்து இல்லை என்பதைஉறுதி செய்ய விரும்பி, தன் பெற்றோரிடம் ரோஹித்தின் எச்ஐவி பற்றிய அறிக்கை வாங்க கூறினாள். இந்த அசாதரணமான வேண்டுகோளை கேட்டு பெற்றோர் ஆச்சரியப்படுகின்றனர்.

**சூழ்நிலை -2**

17 வயது மாளவிகா விரைவில் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள். திருமணம் செய்த உடனேயே கர்ப்பமாக வேண்டும் என அவள் தோழி வேடிக்கையாகக் கூறுகிறாள். இந்தத் தகவலால் அவள் வருத்தம் அடைகிறாள். இப்போது குழந்தைப் பெற்று கொள்ளத் தயாராக இருப்பதாக அவள் உறுதியாகக் கருதவில்லை.

**தலைப்பு-10 வன்முறை மற்றும் காயங்களிலிருந்து கவனம் மற்றும் பாதுகாப்பு**

**சூழ்நிலை -1**

இராமு ஏழாம் வகுப்பு மாணவன். இராமுவின் மாமா அவனுடைய வீட்டுப் பாடங்களை எழுத அவனுக்கு ஒவ்வொரு நாளும் உதவி புரிகிறார். மேலும், அவனுக்கு இனிப்பு மற்றும் சாக்லேட்டுகளைக் கொடுக்கிறார். இராமுவின் மாமா அவனுக்கு வீட்டுப் பாடங்களில் உதவி புரியும் நேரத்தில் அவனைத் தொடக் கூடாத இடங்களில் தொட ஆரம்பித்தார். அவரின் இச்செயல் அவர்கள் இருவருக்குள்ளான இரகசியம். ஆகவே இதைக் குறித்து யாரிடமும் சொல்லக் கூடாது என்றும் கூறினார். அப்படி யாரிடமாவது கூறினால், இராமுவிற்கு வீட்டுப் பாடங்களைச் செய்வதற்குத் தான் உதவ மாட்டேன் என்றும் அதனால் அவன் பள்ளிப் பாடங்களில் தோல்வியைச் சந்திப்பான் என்றும் கூறினார்.

**சூழ்நிலை -2**

ரமேஷ் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர். ஆதலால் அவரது வகுப்பு தோழர்கள் அவரைக் கிண்டல், கேலி செய்து அடித்துத் துன்புறுத்துகின்றனர். இதனால் அவன் பள்ளிக்கு வர பயப்படுகிறான். அவன் யாரிடம் உதவியைக் கேட்கலாம்?

**தலைப்பு-11 இணையம், சாதனங்கள் மற்றும் ஊடகத்தின் பாதுகாப்பான பயன்பாட்டை மேம்படுத்துதல்**

**சூழ்நிலை -1**

பல மாதங்களாக லலித், ப்ரியாவுடன் கைபேசியில் அளவளாவிக் கொண்டிருந்தார். இருவருக்கும் ஒரே வயது எனவும் அருகருகே வசிக்கின்றோம் என்றும் லலித் கூறுகின்றார். ப்ரியாவை சந்தித்து பொருள்கள் வாங்க கடைக்கு அழைத்து செல்ல லலித் விரும்புகிறான்.

**சூழ்நிலை -2**

சமூக ஊடகத்திலிருந்துதான் இருக்கும் இடத்தைப் பகிர்வதை உஷா விரும்புகிறாள். உணவகம் செல்லல், பயணம் மேற்கொள்ளல், நண்பர்கள் அல்லது குடும்பத்தினரைச் சந்தித்தல் போன்ற நிகழ்வுகளில்தான் இருக்கும் இடத்தைப் பகிர்ந்து கொள்வதை அவள் வழக்கமாகக் கொண்டிருந்தாள். ஒரு நாள் தன்னையரோ பின் தொடர்வதைக் கவனித்தாள். அவள், பயந்து, பாதுகாப்பிற்காக ஒரு கடைக்குள் நுழைந்தாள். சில நாட்களுக்குப் பிறகும் இது மீண்டும் நடைபெற்றது.

இயக்குநர்

09/10/25